**உன்னை இரட்சிப்பதற்காக,**

**நான் உன்னோடே இருக்கிறேன். எரே 30 : 11**

அழிந்து கொண்டு இருக்கிறேன் என்று நினைக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

உன்னை இரட்சிப்பதற்காக, நான் உன்னோடு இருக்கிறேன் என்று அறைகூவல் இடும் தேவனுடைய சத்தத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

நீங்கள் தனியாக அல்ல, உங்களோடு ஒருவர் இருக்கிறார். அவரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆனால் அநேக நேரங்களில், அவர் உங்களோடு இருப்பதை மறந்து போகிறீர்கள். உங்களுக்கு அவர் மேல் அதிக பிரியம், அவருக்காகவே வாழுகிறீர்கள், அவருக்காகவே கொடுக்கிறீர்கள், அவரையே அறிமுகப்படுத்துகிறீர்கள், அவரையே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் அவர் உங்களோடே இருப்பதை அநேக நேரங்களில் மறந்து போகிறீர்கள்.

**ஆனால், அவர் சொல்கிறார் – ஏசா. 49 : 15.**

**தாய் தன் பாலகனை மறப்பாளோ ?**

**அவர்கள் மறந்தாலும்,**

**நான் உன்னை மறப்பதில்லை – என்பதாக.**

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, இவ்வுலகில் வாழ்ந்த தம்முடைய கடைசி நாட்களில், தம்முடைய சீஷரைப் பார்த்து சொன்னார்;

**மத்தேயு 28 : 20.**

இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும்,

நான் உங்களுடனே கூட இருக்கிறேன் – என்றார்.

ஆம், சகோதரனே சகோதரியே,

உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களுடனே இருக்கிறேன் என்றவர் உங்கள் ஆயுள் முழுவதும் உங்களுடனே கூட இல்லாமல் போய் விடுவாரா ? நிச்சயமாக இருப்பார்.

நீங்கள் தனிமையில் அல்ல. உங்களோடு இயேசு இருக்கிறார்.

**எவைகளிலிருந்து கர்த்தர் உங்களை இரட்சிப்பார் ?**

**யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து சொல்லுகிறார்**

பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க, உங்களை ஆதரிக்கிறதற்காகவும், **பெரிய இரட்சிப்பினால்** உங்களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை உங்களுக்கு அனுப்பினார். ஆதி 45 : 7

ஆம் சகோதரனே, சகோதரியே,

உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க, உங்களை ஆதரிக்கிறதற்காக, உங்களை உயிரோடே காப்பதற்காக.

இரண்டாவதாக கர்த்தர் சொல்கிறார்.

**எண்ணாகமம் 10 : 9 :** உங்கள் பகைவருக்கு நீங்கலாகி, இரட்சிக்கப்படுவீர்கள்

**ஏசாயா 59 : 19 :** வெள்ளம்போல் சத்துரு வரும் போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடி ஏற்றுவார். – என்பதாக அல்லேலூயா.

ஆம் சகோதரனே, சகோதரியே,

உண்மையாகவே சத்துரு வெள்ளம் போல்தான் வருவான். அதிலும் ஆறு கரை புரண்டு வருவதுப்போல் வருவான். ஆனாலும் ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுவார். அல்லேலூயா.

**கீழ்க்கண்டவாறு உங்கள் விசுவாசத்தைக் அறிக்கையிடுங்கள்.**

**சங்கீதம் 20 : 5 :** நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்தில் கொடியேற்றுவோம்.

**மூன்றாவதாக, அன்னாள் சொல்கிறார். : 1 சாமு 2 : 1** உம்முடைய இரட்சிப்பினால் சந்தோஷப்படுகிறேன்.

**1 சாமு. 2 : 5** மலடியாயிருந்தவள் ஏழு பெற்றாள்.

ஆம் பிரியமானவர்களே, சற்று சிந்திப்போம்.

**அன்னாளுக்கு இரட்சிப்பாக தெரிந்தது எது ?**

தன்னுடைய நிந்தை நீங்கி, குழந்தையைப் பெற்றெடுத்தது அல்லவா ?

ஆம் சகோதரியே,

உன்னை இரட்சிப்பதற்காக, தேவன் உன்னோடே இருக்கிறார்.

**நான்காவதாக யாக்கோபு 5:15 சொல்கிறது.** விசுவாசம் உள்ள ஜெபம், பிணியாளியை இரட்சிக்கும்

உன் வியாதிலிருந்து தேவன் விடுதலை தருவார். எல்லாவற்றிற்கும் மேலாக, **பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்.** 1தீமோ 1:15

பாவத்திலிருந்து விடுதலை பெற முடியாமல் தவிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**கர்த்தர் செல்கிறார்.**

**உன்னை இரட்சிப்பதற்காக, நான் உன்னோடே இருக்கிறேன்** என்பதாக ஆமென்.